<u>சார்பு நீதிமன்றம், துறையூர்.</u>

**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

## <u>OS.No.99/2024</u>

தேதி: 23.03.2026

பெயர் : சரவணன் (வா.சா.2) த/பெ: பட்டு

<u>குறுக்குவிசாரணை</u>

1. நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வாதி பெயர் என்னவென்றால் வீரபத்திரன். வாதி ராஜேந்திரன் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். ராஜேந்திரன் ஜெயங்கொண்டன், ராசிபுரம் கிராமத்தில் வசிக்கிறார். வாதியிடம் ராஜேந்திரனும் அவரது மனைவி தனமும் கடன் வாங்கினார்கள். நான் அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். வாதி பிரதிவாதிகளுக்கு ரூ.4,00,000/- கடன் வாதி வீட்டில் வைத்து கொடுத்தார். கடன் கொடுக்கும்போது நானும், கணக்குபிள்ளை தங்கராசும் உடன் இருந்தோம். தங்கராசு வாதியிடம் வேலை செய்பவர். எனக்கும் வாதிக்கும் பழக்கம் உள்ளது. 15.03.2022ம் தேதி வாதி பிரதிவாதிகளுக்கு கடன் கொடுத்தார். கடனுக்காக புரோநோட் கணக்குபிள்ளை எழுதினார். புரோநோட்டில் தமிழ், ஆங்கில தேதி நிரப்பப்பட்டதா என்றால் நிரப்பப்பட்டது. நான் 2வது சாட்சியாக புரோநோட்டில் கையெழுத்து செய்துள்ளேன். புரோநோட்டில் முதல் சாட்சியாக துறையூரை சேர்ந்த பிரகாஷ் என்பவர் கையெழுத்து செய்தார். நானும், வாதியும், பிரகாஷ்ம், தங்கராசும் சேர்ந்து பிரதிவாதிகள் கடன் வாங்கியதாக புரோநோட் தயார் செய்துள்ளோம் எனவும், கடன் கொடுத்ததாக சொல்லும் சமயம் கொரோனா நோய் தொற்று முடிந்து ஆரம்பித்த காலம் எனவும், பிரதிவாதிகள் கடன் வாங்க வேண்டிய அவசியமில்லை எனவும், வாதி கடன் கொடுத்ததாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடன் கொடுத்த நேரம் என்ன என்றால் பகல் 11 மணி

ஆகும். தாவா புரோநோட் பொய்யாக தயார் செய்த புரோநோட் எனவும், நான் வாதிக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் எனவும், வாதியின் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. சாட்சி தற்போது வாதியின் பெயர் மதுரைவீரன் என தெரிவித்தார்.

/ உண்மை நகல்/

(ஒம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்.